# I AM THE MUHYIUDDIN OF THIS ERA

# நானே ஆவேன் இந்நூற்றாண்டில் தீனுக்கு மறுவாழ்வு கொடுப்பவன்

**வெள்ளிக்கிழமை குத்துபா** 31-08-2012

**FRIDAY SERMON**

## HAZRAT MUNIR AHMAD AZIM (A)

உலக மக்கள் அனைவருக்கும் சமாதான வாழ்த்துக்களை தெரிவித்து, தஷஹ்ஹீத்தும் தஅவ்வுசும் சூராஃபாத்திஹாவும் ஓதியபிறகு கலீஃபத்துல்லாஹ் ஹஸ்ரத் முனீர் அஹ்மது ஆஸீம்(அ) அவர்கள் கீழ்வருமாறு கூறினார்.

**"நம்பிக்கைக் கொண்டோர்கள் யூதர்கள், கிறிஸ்தவர்கள் மற்றும் சாபிகள் ஆகியோருள் அல்லாஹ்வின் மீதும் இறுதிநாளின் மீதும் முழுமையான நம்பிக்கைக் கொண்டு அதற்கேற்ப நற் செயல்கள் ஆற்றுபவர்களுக்கு நிச்சயமாக அவர்களின் இறைவனிடம் அவர்களுக்குரிய வெகுமதிகள் உண்டு. அவர்களுக்கு (எதிர்காலத்தைப் பற்றிய) எந்த அச்சவும் இருக்காது (இறந்த காலத்தை பற்றி) அவர்கள் துயரம் அடையவும் மாட்டார்கள்"** (2:63).

மோட்சத்தின் பால் மனிதர்களை எட்டச் செய்கின்ற மூன்று அடிப்படையான விஷயங்களைக் குறித்தாகும் மேல் சுட்டிக்காட்டிய திருகுர் ஆன் வசனம் விளக்கமளித்திருப்பது.

சொர்க்கத்தில் நுழைய நம்பிக்கை மட்டும் போதுமா அல்லது நற்செயல்கள் மட்டும் போதுமா என்ற ஒரு ஐய்யம் இத்தருணத்தில் எழும்பலாம். இந்த கேள்விக்கு மிக தெளிவான பதிலும் இந்த இறைவசனத்திலேயே காணலாம். அல்லாஹ்வின் திருப்தியை அடைவதும் அவனது விருப்பத்தையும், மகத்துவத்தையும் உயர்த்திக்காட்டுவதும், ஒவ்வொரு மனிதனையும் மோட்ஷத்தின்பால் அல்லது சொர்க்கத்தின்பால் அழைத்து செல்லும். நமது ஒவ்வொரு செயல்களுக்குள் ஒவ்வொரு எண்ணம் இருக்கும். அல்லாஹ்வின் விருப்பத்தை மட்டும் நாடிக்கொண்டு ஆற்றுகின்ற செயல்கள் யாவும் எல்லாவகையிலுமான அழுக்குகளிருந்தும், குறைகளிருந்தும், தவறுகளிருந்தும் முழுமையாக பாதுகாக்கப்பட்டிருக்கும். அதாவது நாம் ஒருவருக்கு உதவி செய்கின்ற போது அந்நபரில் நின்று ஒரு நன்றி வார்த்தையை கூட எதிர்பார்க்காமல் செய்ய வேண்டும் என்பதாகும். ஏனென்றால் நாம் ஆற்றுகின்ற நல்ல செயல்களின் பலன் வழங்குவது அல்லாஹ்வேயன்றி மனிதர்களல்ல. அல்லாஹ்வின் மீது பரிபூரணமான நிலையில் நம்பிக்கைக்கொள்ளும் ஒருவருக்கல்லாமல் அவ்வாறொரு மனநிலையை உருவாக்கிட நிச்சயமாக இயலாது. அவ்வாறொரு மனநிலையை உருவாக்கிடாத மனிதர்களின் ஒவ்வொரு நல்ல செயல்களும் அல்லாஹ்வின் விருப்பத்தை நாடுவதை விட மற்றேதேனும் லௌகீகமான நோக்கத்தின்பால் அமைந்திருக்கும். அது ஒரு வேளை மற்றவர்களுடைய அன்பும், அங்கீகாரமும் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்தின்பால் ஆகலாம். அவ்வகையான செயல்களுக்கு அவர்களின் நோக்கத்திற்கும் எண்ணத்திற்கும் ஏற்ற பலன் மட்டும் இவ்வுலகில் கிடைப்பதாகவும் நமக்கு காணலாம். ஆனால், அவ்வகை செயல்களுக்கு ஆத்மீகமான முன்னேற்றத்தையோ அல்லாஹ்வின் திருப்தியையோ அடைந்துவிட ஒரு பொழுதும் முடியாது.

நமது வாழ்வுக்கு ஒரு சட்டதிட்டத்தை ஏற்படுத்த முற்றிலும் தேவையான ஒன்றேயாகும் நாம் அனைவரும் ஒரு நாள் பதில் கூறவேண்டியவர்களே ஆகும் என்ற நம்பிக்கை. ஒருபோதும் எங்கும் பதிலளிக்க

வேண்டாம் என்ற சிந்தனை எல்லாவகையிலுமான தீய செயல்களிலும் நம்மை ஈர்த்து செல்லும். ஆனால், நமது எல்லா செயல்களுக்கும் ஒரு நாள் பதில்கூறியே தீரும் என்ற சிந்தனை, அதிகமதிகமான நற்செயல்கள் புரியவும் தீயசெயல்களிருந்து விலகவும் ஒவ்வொரு நபரையும் அது தூண்டிக்கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை.

அதாவது நற்செயல்கள் ஆற்றுவது, முழுமையான நம்பிக்கையோடு என்ற கருத்துடன் இணைத்தேயாகும் புனித குர்ஆனில் கூறப்பட்டிருப்பது. நற்செயல்கள் இல்லாத நம்பிக்கை பலனற்றதாகயிருப்பது போலவே, நம்பிக்கையற்ற நற்செயல்களும் வீணானதே ஆகும். சுருக்கமாக கூறினால் எல்லாவகையிலுமுள்ள நற்செயல்களும் அல்லாஹ்வின் நட்பைநாட செய்கின்ற ஒரு நிலையிலான தியாகமேயாகும்.

சூடாமல், மற்றுமத நம்பிக்கையாளர்களும், மோட்சத்தை அடைவார்கள் என்றும் அல்லாஹ் நம்மை தெரியப்படுத்துகின்றான். அவர்களுக்கு (எதிர்காலத்தைப்பற்றிய) எந்த அச்சவும் இருக்காது என்றும் (இறந்த காலத்தை குறித்து) அவர்கள் துயரம் அடையமாட்டார்கள் என்றும் மேல் கூறிய திருமறைவசனம் நமக்கு உறுதியளிக்கின்றது. இஸ்லாமிற்கு முன்பு அவதரித்துள்ள அனைத்து மதங்களும் அல்லாஹ்வால் அனுப்பப்பட்டிருந்த நபிமார்கள் மூலமாக அமைக்கப்பட்டதேயாகும். இஸ்லாமின் சிறப்பான பதவி என்பது அது முழுமானிட குலத்திற்காகவும் அமைத்த, சர்வ தேசிய மார்க்கமாகும், அதேநேரம் மற்றனைத்து மதங்களும் ஒரு குறிப்பான இடத்திற்கோ அல்லது ஒரு குறிப்பான சமுதாயமக்களுக்கே ஆக தோன்றியவையாகும். இந்த உண்மையை அவர்களின் வேத நூல்களிருந்தே புரிந்துகொள்ளலாம். எல்லாம் ஒரே தூய்மையான விளக்கின் ஆத்மீக ஒளியாகயிருப்பதால் அதன் போதனைகளில் ஒன்றுக்கொன்று வேற்றுமை தரிசிக்கவும் இயலாது. ஒரு இறைவன் பலவகையான போதனைகளை மக்களுக்கு கற்பிக்கமாட்டான். அவ்வாறு ஒருபோதும் நிகழுவதில்லை. ஆனால் ஒவ்வொரு மதங்களிலும் இன்று காணமுடியும் பெரிய அளவிலான முரண்பாடுகளுக்கு காரணம், பிற்காலமக்களின் தீய செயல்களும் அவர்களின் சுய விருப்பங்களை பாதுகாப்பதற்குமாக இறை வெளிப்பாடுகளை வளைத்தொடித்து தவறாக விளக்க செய்ததின் விளைவேயாகும்.

அதைபோன்றே அனைத்து உலகத்தின் அதிபனும் பாதுகாவலனுமாகிய அல்லாஹ் அவனது படைப்பினங்களுக்கு தேவைக்குரிய எல்லாவகையிலுமான அருள்களையும் வழங்கியபின் அக்கூடத்தில் ஒரு சமுதாயத்திற்கு மட்டும் மிக தேவையான ஆத்மீக உணவை வழங்கவில்லை என்று எண்ணிக்கொள்ள முடியுமா? ஒருபோதுமில்லை. அதைக்குறித்து அல்லாஹ்வே அவனது திருமறைமூலமாக இவ்வாறு தெரிவிக்கின்றான்.

**“ஒவ்வொரு சமுதாயத்திற்கும் ஒவ்வொரு தூதர் உண்டு. எனவே அவர்களின் தூதர் வரும்போது அவர்களுக்கிடையே நேர்மையுடன் தீர்ப்பு வழங்கப்படுகின்றது. மேலும் அவர்களுக்கு எந்த அனீதியும் இழைக்கப்படுவதில்லை”** (10:48).

அல்லாஹ் அவனது தூதர்ளுக்கு வெளிப்பாடுகளை வழங்கி ஒவ்வொரு சமுதாயத்திற்கும் ஒவ்வொரு மனிதர்களுக்கும் மார்க்க போதனைகளை கொடுத்ததாக மேல் கூறிய இறைவசனம் மூலமாக உணர்ந்துகொள்ளலாம். ஆதிகாலமக்களோ இந்தியாவை சார்ந்தவர்களோ, அமெரிக்காவை சார்ந்தவர்களோ, எக்சிமோகளோ, ஆப்பிரிக்காவை சார்ந்தவர்களோ எவருமாகட்டும் அனைவருக்கும் அல்லாஹ்வில் நின்று மார்க்க போதனைகள் கிடைக்காமல்லை என்பது உறுதியே ஆகும்.

அல்லாஹ்வின் வழியை பின்பற்றுகின்றோர்கள் அவர்கள் யாராகயிருந்தாலும் சரி, எங்கு வாழ்ந்திருப்போர்கள் ஆனாலும் சரி அவர்கள் அனைவரும் முஸ்லீம்களே ஆவார்கள். அவர்கள் அல்லாஹ்வின் விருப்பத்திற்கு கீழ்பணிந்தவர்களும் அவனது போதனைகளை ஏற்றுக்கொண்டவர்களும் ஆவார்கள் என்பதே அதற்கு காரணம். ஆகவே நான் மேல்க்கூறிய இறை வசனத்திருந்து அல்லாஹ்வின் தூது செய்தியை ஏற்றுக்கொள்ள வேண்டியது ஒவ்வொரு மனிதர்களுடையவும் கடமையே ஆகும் என்றும் உணர்ந்துகொள்ளலாம். அல்லாஹ்வின் தூதர்கள் தோன்றுகின்ற போதும் அவர்களைப் பற்றிய அறிக்கை

கிடைக்கின்ற போதும் ஒவ்வொரு நபர்களும் அல்லாஹ்வின் அந்த தூதர்களை ஏற்றுக்கொண்டு அவர்களின் போதனைகளுக்கு கட்டுபட்டு வாழ வேண்டியதேயாகும். இல்லையெனில் இதற்கு நாம் அல்லாஹ்விடத்தில் பதில்கூறியே தீரும்.

அதைக்குறித்து அதிகமான காரியங்களை இன்ஷா அல்லாஹ் நான் அடுத்த குத்துஃபாவில் விளக்குவேன். ஆமேன். நேற்றைய நான் (ஆகஸ்ட் 30, 2012) எனக்கு கிரயோள் மொழியில் அல்லாஹ்விடமிருந்து கிடைத்த ஒரு வெளிப்பாடு இவ்வாறாகும்.

**“ஓ முஹைத்தீன், அவர்களிடம் கூறுவாயாக. நிச்சயமாக நான் உங்களிடத்தில் ஒரு எச்சரிக்கையாளராக வந்திருக்கின்றேன். இவ்வாறு அவர்களின் வேதநூல்களை வளைத்தொடித்து தூள் தூளாக்கிய ஒவ்வொரு சமுதாயத்திலும் எச்சரிக்கையாளர்கள் தோன்றியிருந்தன. அவர்களின் ஒவ்வொரு செயல்களைக் குறித்தும் அவர்களிடத்தில் கேள்வி எழுப்பட்டும். உன்னிடத்தில் கட்டளையிட்டதின்படி அவர்களிடம் கூறுவாயாக. அல்லாஹ்வுக்கு இணைவைப்பதிருந்து நீங்கள் விலகிக்கொள்ளுங்கள். அல்லாஹ்வுக்கு இணைவைப்போர்களுக்கும் ஏளனம் செய்பவர்களுக்கும் எதிரில் நான் உனக்கு போதுமானவன் ஆவேன். இந்த வாக்குறுதி அவர்கள் புரிந்துகொள்ளும் காலம் நெருங்கிவிட்டது.”**

**Issued by R. Jamaludin Raother Amir**
**Jamaat UI-SahihAl Islam, Kerala (Regd) India.**
**Email: jamal.raother@gmail.com**
**Web:www.jamaat-ul-sahih-al-islam.com**
**Phone: 09447001832**

**Translated by**
**Azim Ahmad**
**Sadr Sahibul Faraj**
**Kerala/ TamilNadu**
**09789180817**